பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**26 05 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

2. நாடு முழுவதும் அடுத்த மாதம் நடைபெற உள்ள நீட் மறுதேர்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு போதிய ஒத்துழைப்பு அளிக்குமாறு அனைத்து மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. மின்துறையில் தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

4. தென்காசி மாவட்டத்தில் விதி மீறல்களுடன் செயல்பட்டு வந்த 18 கல்குவாரிகளின் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க கனிம வளத்துறை அமைச்சர் திரு. பிரபு உத்தரவிட்டுள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்றில் பெங்களூரு அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடு முழுவதும் அடுத்த மாதம் **21**ஆம் தேதி நீட் மறுதேர்வை பாதுகாப்பாகவும், வெற்றிகரமாகவும் நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், மாநில முதலமைச்சர்கள், துணைநிலை ஆளுநர்கள் ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் நீட் மறுதேர்வை நடத்துவதற்கு போதிய ஒத்துழைப்பை அளிக்குமாறு கூறியுள்ளார்.

கடும் வெப்பத்தை கருத்தில் கொண்டு தேர்வு மையங்களில் மாணவர்களுக்குத் தேவையான தண்ணீர், தடையற்ற மின்சாரம் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் உறுதி செய்யுமாறு அவர் அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தேர்வு நாளன்று கூடுதல் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்யுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நீர் மறுதேர்வை சுமூகமாவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடத்துவதை உறுதி செய்ய அனைத்து மாநிலங்களும் முழு

ஒத்துழைப்பு அளிக்கும் என்று தாம் நம்புவதாக திரு. தர்மேந்திர பிரதான் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. **Penny Wong,** ஜப்பான் வெளியுறவு அமைச்சர் திரு. **Toshimitsu Motegi** அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. **Marco Rubio** ஆகியோர் பங்கேற்கின்றனர்.

குவாட் நாடுகளின் முன் முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், இந்தோ-பசிபிக் பிராந்திய விவகாரம் மற்றும் இதர பரஸ்பரம் நலன் சார்ந்த சர்வதேச விவகாரங்கள் குறித்து அமைச்சர்கள் இக்கூட்டத்தில் விவாதிக்க உள்ளனர்.

தடையற்ற மற்றும் வெளிப்படையான இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான குவாட் நாடுளின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப கடந்த ஆண்டு வாஷிங்டனில் நடைபெற்ற உரையாடல்களின் அடிப்படையில் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் விவாதிக்க உள்ளனர்.

<<<<>>>>

பத்ம விருதுகள் பெற்றவர்களுக்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தமிழகத்தில் வானொலி ஒலிபரப்பத் துறையில் சிறப்பான பணியாற்றி மக்களுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்ட விஞ்ஞானி டாக்டர் ஆர். ஸ்ரீதருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது பெருமைக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

பத்மஸ்ரீ விருது பெற்றுள்ள ஐபிஎஸ் அதிகாரி திரு. விஜயகுமார், தமிழ்ப்பண் இசைக்கலைஞர் திரு. என். சுவாமிநாதன் ஆகியோருக்கும் டாக்டர் எல். முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளத்தில் 12ஆம் வகுப்பு மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த குற்றவாளிக்கு அளிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு தாம் வரவேற்பு தெரிவிப்பதாக முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இவ்வழக்கு துரிதமாக விசாரிக்கப்பட்டு தர்மமுனீஸ்வரன் என்ற

குற்றவாளிக்கு இரட்டை தூக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கொடூர சம்பவம் நடைபெற்ற 3 மாதங்களுக்குள் மிக துரிதமாக நீதி வழங்கப்பட்டள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்யும் அரசின் நடவடிக்கைகளுக்கு உற்ற துணையாக வழங்கப்பட்டுள்ள இத்தீப்பு வரவேற்கத்தக்கது என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மின்துறையில் தனி நபர்கள் அல்லது குறிப்பிட்ட நிறுவனத்திற்கு சாதகமாக ஒப்பந்தப் புள்ளி வழங்கும் முறை இனிமேல் தொடராது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மின்வாரியத்துடன் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள், மின் உபகரண விநியோகஸ்தர்கள், கொள்முதல் செய்வோர் உள்ளிட்டோருடன் நேற்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் தகுதியின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த காலங்களில் முறைகேடாக வழங்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மறு ஆய்வு செய்யப்பட்டு புதிய வெளிப்படையான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இடைத்தரகர்களுக்கு அனுமதி கிடையாது என்றும் முறைகேடுகள் தடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த ஓராண்டுக்குள் மின்துறையில் முழுமையான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்ததாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தென்காசி மாவட்டத்தில் விதி மீறல்களுடன் செயல்பட்டு வந்த 18 கல்குவாரிகளின் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மாநில கனிம வளத்துறை அமைச்சர் திரு. பிரபு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தென்காசி மாவட்டத்தில் நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

அம்மாவட்டத்தில் உள்ள 54 கல் குவாரிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் 3 குழுக்கள் ஆய்வு செய்ததில் 18 கல் குவாரிகள் விதிகளை மீறி செயல்படுவதாக தெரியவந்தது.

இக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் அமைச்சர் இந்நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே கன்னியாகுமரி மாவட்டத்தில் விதிமீறல்களுடன் செயல்பட்டு வந்த 2 கல் குவாதிகளை தற்காலிகமாக நிறுத்தவும் திரு. பிரபு உத்தரவிட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களின் சில இடங்களில் இன்று இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி கோயம்புத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, தேனி ஆகிய மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் மற்ற பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட **2** டிகிரி முதல் **3** டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்துக் காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான்-அமெரிக்கா இடையே ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக இரு நாட்டு பிரதிநிதிகளிடையே இன்று தோஹாவில் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

-------------

காங்கோ, உகாண்டா நாடுகளில் எபோலா வைரஸ் பரவலையடுத்து அந்நாடுகளுக்கு விமான சேவைகளை இயக்கும் நிறுவனங்களுக்கான முன்னெச்சரிக்கை வழிகாட்டுதல்களை விமான போக்குவரத்து தலைமை இயக்குநரகம் வெளியிட்டுள்ளது.

-------------

செனகல் நாட்டின் புதிய பிரதமராக பொருளாதார நிபுணர் திரு. **Ahmadou Al Aminou Lo**-வை அந்நாட்டு அதிபர் நியமித்துள்ளார்.

-------------

ஜம்மு-கஷ்மீர் குல்மார்க் பகுதியில் ரோப் காரில் கோளாறு ஏற்பட்டு சிக்கித் தவித்த 300க்கும் மேற்பட்ட சுற்றலாப் பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

-------------

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் நீட், JEE போன்ற நுழைவுத் தேர்வுக்கான மாநில அரசு நடத்தும் பயிற்சி வகுப்புகளில் சேருமாறு அத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து அமைச்சர்கள் திரு. ஆனந்த், திரு. தென்னரசு ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

-------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக சுவர் இடிந்து விழுந்த ஒருவரின் குடும்பத்தாருக்கு அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச் செல்வன் அரசு சார்பில் நிவாரண உதவி வழங்கினார்.

-------------

திருவள்ளூர் மாவட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட **380** கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணுமாறு ஆட்சியர் திரு. பிரதாப் அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

-------------

மணலியில் தனியாருக்கு சொந்தமான எண்ணெய் கிடங்கில் பரவிய தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட **2** தீயணைப்பு வீரர்கள் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

-------------

விழுப்புரம் மாவட்டம் வழுதாவூரில் இளைஞர் ஒருவரை கொலை செய்த **3** பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் முதலாவது தகுதிச் சுற்றில் பெங்களூரு அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

தரம்சாலாவில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி **7.30**க்கு தொடங்குகிறது.

-------------

தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா **11-0** என்ற கோல் கணக்கில் மாலத்தீவை வென்றது.

கோவாவில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் **Aveka Singh 4** கோல்களும், **Priyanka, Karishma** ஆகியோர் தலா **2** கோல்களும் அடித்தனர்.

**Piyari Xaxa, Grace, Sangeetha** ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

இந்திய தமது அடுத்த ஆட்டத்தில் வரும் **31**ஆம் தேதி பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--------------

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர் **4-6, 7-5, 6-3** என்ற செட் கணக்கில் போர்ச்சுகலின் **Ferreira Silva**-ஐ வென்றார்.

-------------

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

**<<<<The End>>>>**